# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040867

1. District மாவட்டம்: நாகப்பட்டினம் PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் Year ஆண்டு: 2023 FIR No மு.த.அ. எண்: 01/2023 Date நாள்: 13.03.2023

2. (i) Act சட்டம்: IPC &
(ii) Act சட்டம்: The PC Act 1988 as amended
(iii) Act சட்டம்: by the PC (Amendment) Act, 2018
Sections பிரிவுகள்: 409, 420, 167 IPC r/w. 34 IPC மற்றும் 13(2) r/w. 13(1)(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 16.11.2018 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் அலுவலக நேரம் Time to : நேரம் வரை 2019 ஆம் ஆண்டு வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.03.2023 Time : நேரம் 16.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.03.2023 Time : நேரம் 16.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக முன் விசாரணை (Preliminary Enquiry) செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் நாலுவேதபதி கிராமம்,
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம். 40 கி.மீ. தெற்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.இரா.கிருஷ்ணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. இராமையன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 58/2023 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர் (ஊ.த) (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. N. சத்தியமூர்த்தி, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், 9.நாலுவேதபதி கிராமம், தற்போது [illegible]
2) Tr. K. ராஜேந்திரன், முன்னாள் அஞ்சல் கணக்கு மேலாளர், கோடியக்கரை அஞ்சல் அலுவலகம், தற்போது உதவி மேலாளர் ஆயக்காரன்புலம், வேதாரண்யம் தாலுக்கா நாகப்பட்டினம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் முன்விசாரணை செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

- இல்லை -

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது :-**

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் G.ரமேஷ் குமார் ஆகிய நான், திரு.G.அட்சயக்குமார் வயது.35/2022 த/பெ.குணசீலன், கவுண்டர் தெரு, 9-நாலுவேதபதி வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு அனுப்பியிருந்த மனுவின்பேரில், இயக்குநரக குறிப்பாணை எண் 9567/2019/AGRI/NP, நாள் 17.09.2019-ன்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.அருள்பிரியா அவர்களால் இரகசிய விசாரணை மேற்கொண்டு விழிப்பு அறிக்கை அனுப்பப்பட்டதன் அடிப்படையில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் மூலம், வேதாரண்யம் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 399/2021/அ1, நாள். 01.10.2021-ன்படி நாலுவேதபதி கிராம, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் திரு.S.சத்தியவான் என்பவர் மீது முதற்கட்ட விசாரணை மேற்கொள்வதற்கு பெறப்பட்ட அனுமதியின்படியும், நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ4/1668/2022, நாள் 17.02.2022-ன்படி கோவில்பத்து உதவி வேளாண்மை அலுவலர் திரு.K.ரவிச்சந்திரன் என்பவர் மீது முதற்கட்ட விசாரணை மேற்கொள்வதற்கு பெறப்பட்ட அனுமதியின்படியும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைமீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறைமீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Tr. R. [illegible] DSP அவர்களால் [illegible] பரிசு சுகாதாரம் [illegible]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைமீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
13.02.2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.3.2023
17.00 Hrs.

Name: பெயர் (G. RAMESH KUMAR)
Rank: நிலை INSPECTOR OF POLICE
Vigilance and Anti Corruption
Nagapattinam.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி** :-

PE.99/2021/REV/NP, நாள் 21.10.2021-ல் கண்ட அறிவுரைகளின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.R.சித்ரவேலு அவர்களால் முன்விசாரணை (Preliminary Enquiry) செய்து அறிக்கை அனுப்பியதன் அடிப்படையில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா 9-நாலுவேதபதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த திரு.N.சத்தியவான் மற்றும் வேதாரண்யம் தாலுக்கா, தலைஞாயிறு வட்டாரம், கோவில்பத்து உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரிந்த திரு.K.ரவிச்சந்திரன் ஆகியோர் 2018-ம் ஆண்டு 16.11.2018-ஆம் தேதி அதிகாலை வீசிய கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்து, 9-நாலுவேதபதி வருவாய் கிராமத்திற்கு 2018-2019-ம் ஆண்டில் கூட்டாக தயார் செய்த தென்னை நிவாரணப்பட்டியலில் தகுதியற்ற நபர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு காரணமாக இருந்து முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதற்கு முகாந்திரம் இருப்பது முன்விசாரணையில் தெரியவந்ததன் அடிப்படையில், நாலுவேதபதி முன்னால் கிராம நிர்வாக அலுவலர் திரு.N.சத்தியவான், மற்றும் தலைஞாயிறு வட்டாரம் கோவில்பத்து முன்னால் உதவி வேளாண்மை அலுவலர் திரு.K.ரவிச்சந்திரன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்திட சென்னை தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணையத்தின் கடித எண் 1182/விபஆ-I/2022-1, நாள் 20.04.2022-ன்படி வழங்கப்பட்ட அனுமதி மற்றும் வேதாரண்யம் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் கடித ந.க.எண் 399/2021/அ1, நாள். 29.11.2022-ன்படி 9-நாலுவேதபதி கிராம, முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் திரு.S.சத்தியவான் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்வதற்கு பெறப்பட்ட அனுமதியின்படியும், நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ3/1668/2022, நாள் 19.10.2022-ன்படி கோவில்பத்து தலைஞாயிறு வட்டாரம் உதவி வேளாண்மை அலுவலர் திரு.K.ரவிச்சந்திரன் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்வதற்கு பெறப்பட்ட அனுமதியின்படியும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் PE.99/2021/REV/NP, நாள் 13.12.2022 மற்றும் 17.02.2023 ஆகியவற்றில் அளிக்கப்பட்டுள்ள வழிக்காட்டுதல் மற்றும் அறிவுரைகளின் பேரில் இன்று 13.03.2023 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு எதிரிகள் மீது வழக்குபதிவு செய்த விபரம் பின்வருமாறு :-

எதிரி-1 திரு.N.சத்தியவான் என்பவர் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, 9-நாலுவேதபதி கிராம நிர்வாக அலுவலராக 23.03.2018 முதல் 09.12.2019 வரை பணிபுரிந்தும், தற்சமயம் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, தலைஞாயிறு மூன்றாம் சேத்தி கிராம நிர்வாக அலுவலராக 05.07.2021 முதல் பணிபுரிந்து வருகிறார்.

எதிரி-2 திரு.K.ரவிச்சந்திரன் என்பவர் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, கோவில்பத்து தலைஞாயிறு வட்டாரம் உதவி வேளாண்மை அலுவலராக 20.02.2016 முதல் 30.06.2019 வரை பணிபுரிந்தும், தற்சமயம் நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு வட்டாரம், நீர்முளை உதவி வேளாண்மை அலுவலராக 01.07.2019முதல் பணிபுரிந்து வருகிறார்.

எதிரி-1 திரு.N.சத்தியவான் மற்றும் எதிரி-2 திரு.K.ரவிச்சந்திரன் ஆகியோர் சட்ட பிரிவு 2(c) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act, 2018-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

2018 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 16ஆம் தேதி அதிகாலையில் வீசிய கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குண்டான சேதத்திற்கு அரசாணை G.O(Ms) No.480 Revenue and Disaster Management Department, Disaster Management Wing, D.M.II Section, Dated: 10.12.2018-ன்படி பாதிக்கப்பட்ட தென்னை மரம் ஒன்றிற்கு ரூபாய் 600/- மற்றும் பாதிக்கப்பட்ட தென்னை மரம் ஒன்றினை வெட்டி, அகற்றுவதற்கு தென்னை மரம் ஒன்றிற்கு ரூபாய் 500/- என்ற விகிதத்திலும், மொத்தம் ஒரு தென்னை மரத்திற்கு ரூபாய் 1100/- என்ற விகிதத்திலும், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 700 மரங்களுக்கு அதிகபட்ச நிவாரணத் தொகையாக ரூபாய் 7.75 லட்சத்திற்கு மிகாமல் நிவாரணம் வழங்கலாம் என அரசு உத்திரவிட்டு அதனடிப்படையில்Commissionerate of Revenue Administration, Disaster Management, Chepauk-600005-ன் Proceedings of the Additional Chief Secretary/ Commissioner of ReveneAdminstration Present: Dr.K.Satyagopal, I.A.S. in Proc.No.NC.1(1)/2675/2018, Date: 11.12.2018-ல் நாகப்பட்டினம் மாவட்டத்தில் முன்மதிப்பீட்டின்படி 3885.82 ஹெக்டேர் நிலப்பரப்பில் 2,84,921 தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், முதல் கட்டமாக ரூபாய் 17.50000 கோடி நிதி ஒதுக்கப்பட்டும், மேற்கண்ட அரசாணை மற்றும் செயல்முறையின் பேரில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் நவடிக்கைகள் ந.க.15081/2018/உ1, நாள் 13.12.2018-ன்படி பாதிக்கப்பட்டதென்னை நிவாரண பட்டியல்கள் தயார் செய்ய பின்பற்றவேண்டிய வழிகாட்டுதல்கள் குறித்து அனைத்து வட்டாட்சியர்களுக்கும், சார் ஆட்சியர், மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், குறிப்பாக, கிராம அளவில், வட்டார அளவில், மாவட்ட அளவில் உள்ள தென்னை பாதிக்கப்பட்ட பரப்பளவு ஒத்திசைவு பரப்பளவிற்கு (Reconciled Area) கூடுதலாக இருக்கக்கூடாது எனவும், அடங்கல் பதிவேட்டில் உள்ள பதிவுகள் சரிபார்க்கப்பட வேண்டும் மற்றும் எதிர் சரிபார்க்கப்பட (Counter Checked) வேண்டும் எனவும், எங்கே மொத்த தென்னை மரங்களில் 33%க்கு குறைவாக தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோ அதற்கு தனி விவசாயிகள் பட்டியல் தயார் செய்யப்பட

வேண்டும் என்றும், அதேபோன்று, எங்கே மொத்த தென்னை மரங்களில் 33%க்கு அதிகமாக தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோ அதற்கு தனி விவசாயிகள் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும் எனவும், வேரோடு விழுந்த மரங்கள், மரங்களின் மேற்பகுதி (Crown) முறிந்த மரங்கள் கணக்கிடப்பட வேண்டும். மேற்பகுதி திருகி (Twisted) உள்ளதற்கு தனி ஸ்டேட்மென்ட் தயார் செய்யப்படவேண்டும் எனவும், வட்ட அளவில் உதவி வேளாண்மை அலுவலர்/ மண்டல துணை வட்டாட்சியர்/ வருவாய் ஆய்வாளர்கள்/ கிராம நிர்வாக அலுவலர்கள் கொண்ட வருவாய் மற்றும் வேளாண்மைத்துறையின் அதிகாரிகளின் குழுவினரால் கணக்கெடுப்பு செய்து பயிர் சேதத்திற்கான கூட்டு மதிப்பீட்டிற்கு பிறகு, உரிய விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும், நிவாரணத்தொகை விடுவிக்கப்படுவதற்கு முன்பாக சேதமடைந்த பயிர்களின் புகைப்படம்/ வீடியோக்களுடன் கூடிய சரியாக ஆவணம் சேகரிக்கப்பட வேண்டும் எனவும், கணக்கெடுப்பு மற்றும் மேலாய்வு செய்ததற்கான முறையான பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்த விபரங்கள் Hard and Soft நகலாக பராமரிக்கப்பட வேண்டும் எனவும், போலியான பயனாளிகளை தவிர்த்திட, பயனாளிகளிடம் ஆதார் எண் பெறப்பட வேண்டும் எனவும், பயனாளியின் ஆதார் எண் தொலைந்திருந்தாலோ, காணாமல் போயிருந்தாலோ, சிறப்பு முகாம்கள் அமைத்து பயனாளிகளுக்கு ஆதார் எண்/EID எண் வழங்கப்பட வேண்டும் எனவும், ஒரு விவசாயிக்கு இரு முறை நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை என்பதனை உறுதி செய்திட வேண்டும் என்பன உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வழிகாட்டுதல்களின்படி, நாலுவேதபதி கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த எதிரி-1 திரு.N.சத்தியவான் மற்றும் கோயில்பத்து உதவி வேளாண்மை அலுவலராக பணியிலிருந்த எதிரி-2 திரு.K.ரவிச்சந்திரன் ஆகியோர் 2018 ஆம் ஆண்டு, நவம்பர் 16 ஆம் தேதி அதிகாலை வீசிய கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குண்டான பயனாளிகளுக்கான நிவாரணப்பட்டியல்களை 2018-2019-ல் தயார் செய்யும் பணியினை செய்துள்ளனர். எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் தயார் செய்தபட்டியல்களில் கண்டுள்ள பயனாளிகளுக்கு, பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்களில் சாகுபடி செய்திருந்த பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் மற்றும் அதற்காக தொகை கணக்கிடப்பட்டு கையெழுத்திட்டு அளித்ததன் அடிப்படையில், பட்டியல்களில் குறிப்பிடப்பட்டிருந்த பயனாளிகளின் வங்கி கணக்கில் நிவாரணத்தொகை அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணையின்படி, எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர் 2018-ம் ஆண்டு கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்து, 9-நாலுவேதபதி வருவாய் கிராமத்திற்கு 2018-2019-ம் ஆண்டில் தயார் செய்த தென்னை நிவாரணப் பட்டியலில், 1428 பசலியில் 9-நாலுவேதபதி கிராம அடங்கலில் தென்னை சாகுபடி செய்யாத நபர்களின் 757 சர்வே எண்களுக்குண்டான நிலப்பரப்பில், தென்னை சாகுபடி

செய்யப்பட்டதாக, தகுதியற்ற பயனாளிகள் பெயர்களில், பொய்யான நிவாரணப் பட்டியலினை அரசை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு தெரிந்தே தயார் செய்து கையெழுத்திட்டு, பொய்யாக தயார் செய்யப்பட்ட நிவாரணப்பட்டியலை உண்மையான பட்டியலாக அளித்து முறைகேடுகளில் ஈடுபட்டதன் மூலம், பொய்யான நிவாரணப் பட்டியலினைக் கொண்டு தகுதியற்ற பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு, அதன்மூலம் தகுதியற்ற நபர்கள் அரசு பணத்தினை பெற அனுமதித்து அரசுக்கு ரூபாய் 1,27,57,400/-எதிரிகளால் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக, 9-நாலுவேதபதி கிராமத்தின் நிவாரணப் பட்டியல் புத்தக எண்.1/248, சர்வே எண்.12/5பி-ல் 0.040 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.23/2பி-யில் 0.225 ஏர்ஸ் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டதாக முத்துலெட்சுமி க/பெ.ரெங்கசாமி என்பவர் பெயருக்கு ரூபாய் 58,300/- நிவாரணம் 1, 2 எதிரிகள் வழங்கிய பட்டியல்படி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 1428 பசலி அடங்கல்படி சர்வே எண்.12/5பி-ல் நெல் சாகுபடியும் மற்றொரு சர்வே எண் 23/2பி-யில் 0.225 ஏர்ஸ் தரிசாகவும் இருந்துள்ளது.

எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர் 2018-ம் ஆண்டு கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்து 9-நாலுவேதபதி வருவாய் கிராமத்திற்கு 2018-2019-ம் ஆண்டில் தயார் செய்த தென்னை நிவாரணப் பட்டியலில், 1428 பசலியில் 9-நாலுவேதபதி கிராம அடங்கலில் இல்லாத 388 சர்வே எண்களுக்குண்டான நிலப்பரப்பில், தென்னை சாகுபடி செய்யப்பட்டதாக, தகுதியற்ற பயனாளிகள் பெயர்களில், தவறான நிவாரணப் பட்டியலினை அரசை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு தெரிந்தே தயார் செய்து கையெழுத்திட்டு, தவறாக தயார் செய்யப்பட்ட நிவாரணப்பட்டியலை உண்மையான பட்டியலாக அளித்து முறைகேடுகளில் ஈடுபட்டதன் மூலம், தவறாக நிவாரணப் பட்டியலினைக் கொண்டு தகுதியற்ற பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு, அதன்மூலம் தகுதியற்ற நபர்கள் அரசு பணத்தினை பெற அனுமதித்து அரசுக்கு ரூபாய் 72,17,100/- எதிரிகளால் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக அ-பதிவேட்டிலும், 1428 பசலி அடங்கல்படியும், இல்லாத சர்வே எண் 10/7பி-க்கு நிவாரணப் பட்டியல் புத்தகம் வ.எண்.1/96-ன்படி சர்வே எண்.10/7பி-ல் சரவணன் த/பெ.சாமிநாதன் என்பவருக்கு 0.050 பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டதாக 1, 2 எதிரிகள் கொடுத்த பட்டியலின் அடிப்படையில் ரூபாய் 11,000/- வழங்கப்பட்டுள்ளது.

எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர் 2018ம் ஆண்டு கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்து 9-நாலுவேதபதி வருவாய் கிராமத்திற்கு 2018-2019-ம் ஆண்டில் தயார் செய்த தென்னை நிவாரண பட்டியலில் 1428-பசலியில், 9-நாலுவேதபதி

கிராம அடங்கல்படி உள்ள நிலப்பரப்பினை சுமார் 324 சர்வே எண்களுக்கு அதிகப்படுத்தி ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் பெயர்களில் நிவாரண பட்டியல் தயார் செய்ததிலும், நில உரிமையாளர் அல்லாத வேறு தகுதியற்ற பயனாளிகள் பெயர்களில், தவறான நிவாரணப் பட்டியலினை அரசை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு தெரிந்தே தயார் செய்து கையெழுத்திட்டு, தவறாக தயார் செய்யப்பட்ட நிவாரணப்பட்டியலை உண்மையான பட்டியலாக அளித்து முறைகேடுகளில் ஈடுபட்டதன் மூலம், தவறான நிவாரணப் பட்டியலினைக் கொண்டு தகுதியற்ற பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு, அதன்மூலம் தகுதியற்ற நபர்கள் அரசு பணத்தினை பெற அனுமதித்துஅரசுக்கு ரூபாய் 72,70,780/- எதிரிகளால் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக அ-பதிவேடு மற்றும் 1428 பசலி அடங்கலில் பதிவேட்டில் உள்ள சர்வே எண்.15/18பி-ல் கொடிமுத்து த/பெ.கணேசன் என்பவர் பெயரில் 0.090 ஏர்ஸ் மா பயிரிட்டதாக 1428 பசலி அடங்கலில் உள்ளது. ஆனால் அதே சர்வே எண்ணில் தனபால் த/பெ.ராஜாமணி என்பவர் 0.070 ஏர்ஸ் நிலத்திலும், கொடிமுத்து த/பெ.கணேசன் என்பவர் 0.090 ஏர்ஸ் நிலத்திலும் தென்னை பயிரிட்டதாக நிவாரணப் பட்டியல் 1, 2 எதிரிகளால் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டதன் பேரில், ரூபாய் 35,200/- நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர் 2018-ம் ஆண்டு கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்து 9-நாலுவேதபதி வருவாய் கிராமத்திற்கு 2018-2019-ம் ஆண்டில் தயார் செய்த தென்னை நிவாரண பட்டியலில் 1428-பசலியில், 9-நாலுவேதபதி கிராம அடங்கல்படி அரசுக்கு சொந்தமான பொது இடங்களுக்குரிய 5 சர்வே எண்களுக்கான நிலப்பரப்பினை தனிநபர்களின் பெயர்களில், தென்னை சாகுபடி செய்யப்பட்டதாக தகுதியற்ற பயனாளிகள் பெயர்களில், தவறான நிவாரணப் பட்டியலினை அரசை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு தெரிந்தே தயார் செய்து கையெழுத்திட்டு, தவறாக தயார் செய்யப்பட்ட நிவாரணப்பட்டியலை உண்மையான பட்டியலாக அளித்து முறைகேடுகளில் ஈடுபட்டதன் மூலம், தவறான நிவாரணப் பட்டியலினைக் கொண்டு தகுதியற்ற பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு, அதன்மூலம் தகுதியற்ற நபர்கள் அரசு பணத்தினை பெற அனுமதித்து அரசுக்கு ரூபாய் 1,05,600/- எதிரிகளால் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக 9-நாலுவேதபதி கிராம சர்வே எண்.75/1-ல் 0.210 ஏர்ஸ் அரசு புறம்போக்கு சாலையாக 1428 அடங்கலில் உள்ளது. அந்த சர்வே எண்ணில் சௌந்தர்ராஜன் த/பெ.ராமசாமி தென்னை சாகுபடி செய்ததாக 1, 2 எதிரிகள் பட்டியல் தயார் செய்து வழங்கியதன் பேரில், ரூபாய் 17,600/- நிவாணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்சொன்ன எதிரி-1 திரு.N.சத்தியவாணன் மற்றும் எதிரி-2 திரு.K.ரவிச்சந்திரன் ஆகியோரின் செய்கை குற்ற விசாரணைக்கு உட்படுத்த போதிய முகாந்திரம் இருப்பதால், எதிரிகள் மீது நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**01/2023**, சட்ட பிரிவுகள் 409, 420, 167 IPC r/w. 34 IPC மற்றும் சட்ட பிரிவு 13(2) r/w.13(1)(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act, 2018-ன்படி இன்று **13.03.2023** ஆம் தேதி மாலை **16.00** மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

(க.ரமேஷ் குமார்) 13.3.2023
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசலினை, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் / சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பியும், நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

(க.ரமேஷ் குமார்) 13.3.2023
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.